அடுத்தகட்டமாக, மாநிலத்திலுள்ள அனைத்து முழுநேர நூலகங்களையும், நூலகக் கட்டட வசதி மற்றும் நூலக நிதி வசதியைப் பொறுத்து, மேற்சொன்ன வசதிகளுடன் மேம்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் தனது சொந்தத் தொகுதியிலே உள்ள கிராமங்களில் நூலகங்கள் அமைக்க வேண்டியதன் அவசியத்தை இங்கே சுட்டிக்காட்டி இருக்கின்றார். அவற்றை ஆய்வு செய்து, ஆய்வின் அடிப்படையிலே, அந்தப் பகுதியிலே கிளை நூலகங்கள் அல்லது பகுதிநேர நூலகங்கள் அமைப்பதற்குத் தேவையான ஆய்வினை மேற்கொண்டு, தேவையின் அடிப்படையில் உறுப்பினரின் கோரிக்கை பூர்த்தி செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 105, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**105—**

**புதிய கட்டடம்**

***279—திரு. ம. முத்துராமலிங்கம்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருமங்கலம் தொகுதி, டி.புதுப்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் ஒன்றியம், டி.புதுப்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திலே,

2015 மார்ச் 31]

ஏற்கெனவே தடுப்பூசிக் கூடம் ரூ.4,40,000/- மதிப்பீட்டிலும், பிரசவ அறை விரிவாக்கப் பணிகள் ரூ.10,00,000/- செலவிலும் முடிக்கப்பட்டுள்ளன. தற்போது மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் செவிலியர் குடியிருப்பு கட்ட ரூ.16.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் அவை பயன்பாட்டிற்கு வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை எடுத்துக்காட்டுகிற வகையில், தமிழகத்தினுடைய மக்களின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டின் மூலமாக, அந்தப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஏழையெளிய மக்களெல்லாம் உயரிய மருத்துவ உதவி பெறுவதற்கு வாய்ப்பாக வழங்கிக் கொண்டிருக்கின்ற இந்த வேளையில், திருமங்கலம் ஒன்றியத்தில் அமைந்திருக்கின்ற டி.புதுப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளை மையமாகக் கொண்டு, கருவுற்ற தாய்மார்களுக்கு சிறப்பு கிசிச்சை முகாம் நடைபெறுகிறபோது, நூற்றுக்கும் மேற்பட்ட கருவுற்ற தாய்மார்கள் எல்லாம் அங்கே வருகை தந்திருந்தார்கள். அவர்களுக்கான வசதிகளை மேம்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அங்கே கூடுதல் கட்டடம் வேண்டுமென்று கேட்டிருந்தேன். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின் பிரகாரம், அங்கு கூடுதல் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. அதற்காக அந்தப் பகுதி மக்களின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேபோல், திருமங்கலம் ஒன்றியத்தில் சாத்தன்குடி ஆரம்ப சுகாதார நிலையம், டி.கல்லுப்பட்டியிலே சுக்கராபுரம் ஆரம்ப

சுகாதார நிலையம், கள்ளிக்குடி ஒன்றியத்திலே வில்லூர் ஆரம்ப சுகாதார நிலையம், கூடக்கோவில் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் டி.புதுப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையங்கள் எல்லாம் சுற்றுச் சுவர் இல்லாமல் இருக்கின்றன. வரக்கூடிய மக்கள் மண் தரையில் நடந்து செல்கிறபோது, மழைக் காலங்களில் நோய் வருவதற்கான வாய்ப்பு இருக்கும் என்று கருதுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து டி.புதுப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மூன்றரை இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே Paver block தளம் அமைத்துக் கொடுத்திருக்கிறோம். அதுபோல், மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின் பிரகாரம், நான் குறிப்பிட்டிருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கெல்லாம் சுற்றுச் சுவரும், கான்கிரீட் தளமும் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு, தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் 1,751 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றும் தேசிய ஊரக நலத் திட்ட நிதியிலிருந்து தொடர்ந்து படிப்படியாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தேவைப்படுகின்ற கூடுதல் கட்டடங்கள், பிரசவ அறைகள், செவிலியர் குடியிருப்புகள், சுற்றுச் சுவர் கட்டுதல் போன்ற பணிகள் தொடர்ந்து படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற, அவருடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களும் படிப்படியாக தேவைக்கேற்ப மேம்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2015 மார்ச் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டி.கல்லுப்பட்டியில் செயல்பட்டுவரும் வட்டார மருத்துவமனைக்கும் கான்கிரீட் தளம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற எனது கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை விதிமுறைகளுக்குட்பட்டு, நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### உடன்குடி அனல் மின் நிலையம், ஒப்பந்தப்புள்ளி இரத்து மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி அனல் மின் நிலையம், ஒப்பந்தப்புள்ளி இரத்து செய்யப்பட்டு, மறு ஒப்பந்தப்புள்ளி கோருவது குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின், திரு. துரைமுருகன், திரு. எ.வ. வேலு, திரு. இ. பெரியசாமி, திரு. அர. சக்கரபாணி ஆகியோர் விதி 56-ன்கீழும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ஏ. லாசர்,